

சுவைஞர்களுக்கு விருந்தாகி, பல பரிமாணங் களின் பின் கலாதேவியின் பாதார விந்தங்களில் நிறைந்து விடுகிறது. கலைகளெல்லாமும் ஆண்டவனுக்குத்தானே அர்ப்பணம்.

இவரது தந்தையார் வெங்கடராமன்-தாயார் சூடாமணி. இவருடன் பிறந்தவர்கள் சகோதரி-சித்ரா, தம்பி-பிரசாத். அவர்கள் வேறு துறைகளில் சென்றுவிட சுதா இசைத்துறையில் தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்டார். தணியாத இசைத் தாகம் கொண்ட தன் தாயாரிடமே ஆரம்ப இசையைக் கற்றுக் கொண்டார். சிறுவயது முதலே இசையில் ஈடுபாடு கொண்டு பாடத் தொடங்கிய சுதா 9 வயதில் சங்கீத வித்வான் பி.வி. லக்ஷ்மணன் அவர்களிடம் இசை பயின்றார்கள். அதன் பின் மத்திய அரசின் உதவித்தொகை கிடைக்கவே திருமதி. எம்.எல்.வசந்தகுமாரி அவர்களிடம் 3 வருடப் பயிற்சிக்காகச் சேர்ந்து கற்று வந்தவர், பயிற்சி காலம் முடிந்த பின்னும் விடாமல் எம்.எல்.வி. அவர்களிடமே குரு சிஷ்யை முறையில் பாடம் பயின்று அவர்களுடனேயே கூடப் பாடி இசையில் மிகுந்த தேர்ச்சி பெற்றார்.

இந்தியன் பைன் ஆர்ட்ஸ் சொசைட்டியினர் நடத்திய இசைப் போட்டியில் பங்கு கொண்டு தம்புராப் பரிசு பெற்ற சுதா பரிசு பெற்றவர்களை டிசம்பர் சீசனில் பாட வைக்கும் சபாவின் அழைப்பின் பேரில் தனது 17வது வயதில் தனது முதல் மேடைக் கச்சேரியை அரங்கேற்றினார்.

வருடத்திற்கு நூற்றுக்கு மேற்பட்ட கச்சேரிகள் செய்து வரும் சுதா இதுவரை மூவாயிரத்துக்கும் மேற்பட்ட கச்சேரிகள் செய்துள்ளார். நூற்றுக்கு மேற்பட்ட ஒலிநாடாக்கள் வெளிவந்துள்ளன. சினிமாவிலும் தன் முத்திரையைப் பதித்துள்ளார் தன் குருநாதரைப் போல.

அமெரிக்கா, கனடா, லண்டன், ஜெர்மனி, சுவிட்சர்லாந்து, பெல்ஜியம் மற்றும் கிழக்கு நாடுகள் பலவற்றிலும் தன் தெவிட்டாதத் தேனிசை மழையில் மக்களை நனைய வைத்திருக்கிறார்.

சுதாவின் கச்சேரி என்றால் ஏகப்பட்ட கூட்டம். ரசிகர்கள் அவரின் இசையில் தேனுண்ட வண்டாய் மயங்கி விடுகின்றனர். அவர் இசையில் ஒரு காந்த சக்தி இருக்கிறது.

இவரிடம் மாணவிகளாக பயில்பவர்கள் பாக்யசாலிகளே. நல்லதோர் இசைப்பள்ளி ஒன்று தொடங்கி இசையைக் கற்றுத்தர வேண்டும் என்பது இவரது பல நாள் அவா.

சுதாவின் கணவர் ரகுநாதன் புன்சிரிப்பு மாறா இளைஞர். என்றும் சுறுசுறுப்புடன் செயலாற்று பவர். சுதாவின் இசை வளர்ச்சியில் அவருடைய பங்களிப்பு போற்றுதற்குரியது. ஒரு-பெண்ணின் வெற்றிக்குப் பின்னால் ஒரு ஆண் என்று சொல்லிவிடலாம். ஆம் சுதாவின் வெற்றிக்குப் பின்னால் ரகுநாதனே.

இரு குழந்தைகள். கௌசிக், மாளவிகா. இவர்களும் தாயாரின் இசைப்பணிக்கு நல்ல ஒத்துழைப்புத்தரும் உத்தமமான குணம் படைத்தவர்கள்.

இவர் பெற்ற பட்டங்கள் இருநூற்றைம் பதையும் தாண்டியுள்ளன.

□